

# இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்

மைதிலி (1973)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ‘திசை’ வார இதழ் மூலம் அறிமுகமானவர். ‘கொற்றவை’ எனும் புனைபெயரில் பல கவிதைகள் வெளியாகியுள்ளன.

கனடாவில் வன்முறையால் பாதிப்படைந்த பெண்கள், குழந்தைகளுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்குகிற கல்வித் துறையில் ஈடுபட்டு வருகிறார். அத்துடன் OMNI-II தொலைக்காட்சி சேவையில் பகுதிநேர நிருபராகப் பணிபுரிகிறார். துணைவர் : உதயசங்கர், மகள் : நிரா

முகவரி : # 501 - 3700, Lawrence Ave. East, Scarborough,
Ontario, MIG 3T2, Canada.
e-mail : maithilyu@hotmail.com

# இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்

மைதிலி

காலச்சுவடு பதிப்பகம்

விலை 35 ரூபாய்

இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள் • கவிதைகள் • ஆசிரியர் : மைதிலி • © மைதிலி • முதல் பதிப்பு : செப்டம்பர் 2003 • வெளியீடு : காலச் சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001, தொலை பேசி : 91 – 4652 – 278525, தொலைநகல் : 91 – 4652 –231160, மின்னஞ்சல் : kalachuvadu@sancharnet.in • அச்சுக்கோப்பு : காலச்சுவடு பதிப்பகம் • அட்டை வடிவமைப்பு : சந்தோஷ் • அட்டை அச்சாக்கம் : பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 • அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

காலச்சுவடு பதிப்பக வெளியீடு : 60

Iravil Salanamattu Karaiyum Manitharkal • Poems • Author: Maithily • © Maithily • Language : Tamil • First Edition : September 2003 • Size : Demy 1 x 8 • Paper : 18.6 kg maplitho • Pages : 64 • Copies : 1100+100 • Published by Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India. Phone : 91- 4652 - 278525, Fax : 91-4652-231160, e-mail : kalachuvadu@sancharnet.in • Typeset : Kalachuvadu Pathippagam • Cover Design : Santhosh • Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 • Printed at Mani Offset, Chennai 600 005 • Price Rs. 35

**Selling Rights :** Sudarsan Books, 74 East of Tower, Nagercoil 629 001, Phone : 91- 4652 - 228445, Fax : 91-4652-231160, E-mail : sudarsanbooks @yahoo.com.

ISBN 81-87477-44-X

9/2003/S.No.60, kcp 67, 18.6 (1) 1200

என் அம்மா சிவகாம சுந்தரிக்கும்
அப்பா அருளையாவிற்கும்

# நன்றியுரை

அம்மாதான் எழுத்துலகை எனக்கு அறிமுகப்படுத்திய நபர். சிறிய வயதிலேயே தேர்ந்தெடுத்த ரசனைமிகு இலக்கியங்களைப் பரிச்சயம் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு நண்பன் மதுசூதனனும் ஒரு காரணம். புங்குடுதீவு என் ஊர். என்னால் மறக்கவே முடியாத, என் கனவுகளில் என்றென்றைக்குமாய் தங்கிவிட்ட, அருமையான . . . போலிகளற்ற என் பால்ய பருவத்தை அங்குதான் கழித்தேன். பத்துகளிலிருந்து யாழ்ப்பாண வாழ்வு. என் அனுபவங்களைக் கவிதை வடிவாக வெளியிடக் கற்றுக் கொண்டது அம்மாவிடமும் அக்கா செல்வியிடமும் இருந்துதான். அச்சுக்குள் வராது என் ஊர் வேலிகளின் பின்னும் சுவர்களிற்கு மத்தியிலும் சிதறுண்டு போன எத்தனையோ திறமைசாலிப் பெண்களின் படைப்புகளுள் அவர்களினதும் அடக்கம்.

என் கவிதைகள் முதன்முதலாக 90களில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ‘திசை’ பத்திரிகையிலேயே பிரசுரமானது. ‘திசை’யினூடாகப் பல இளம் படைப்பாளிகளை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்திய மு. பொன்னம்பலம், அ. யேசுராஜா ஆகியோரை இந்நேரம் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

அவலமும் அவசரமும் நிறைந்த காலங்களில், இன்று சந்திக்கும் நண்பர்களை நாளை காணுவேனோ என்கிற நிச்சயமற்ற நிலையில் காகிதங்களில் எழுதிச் செல்லும் வரிகளை யார் பொருட்படுத்தப் போகிறார்கள்? தொடர்ச்சியான யுத்தமும். இடப்பெயர்வும் பெரும்பாலான என் கவிதைகளைத் தின்றுவிட்டன. எஞ்சியவற்றைத் தொகுத்துத் தர உதவிய என் சகோதரிகள் செல்வி, பப்பி என்கிற பவானி (ஆகர்சியா) ஆகியோர் என் நன்றிகூரலை எதிர்பார்த்து எதையும் செய்யவில்லை. என் தேவைகளை விரைந்து பூர்த்தி செய்கிற அப்பாவிற்கும் என்னை, என் உணர்வுகளைப் புரிந்து கொள்கிற, என்னை எப்போதும் தட்டிக்

கொடுக்கிற, என் கவிதைத் தொகுப்பொன்றை எதிர்பார்த்துக் காத்திருந்த, அதைக் காணாமலேயே அமரரான என் தாத் தாவிற்கும் நன்றிகளை எப்படித் தெரிவிப்பேன் . . . ?

புதிய படைப்புகளை என்னுடன் பகிர்ந்துகொள்கிற மது விற்கும் க. சட்டநாதனிற்கும் இத்தொகுப்பை வெளியிட நான் காட்டிய அசிரத்தையைக் கண்டுணர்ந்து இத் தொகுப்பை வெளியிடுவதற்கு ஊக்கம் தந்த சேரனிற்கும் என் துணைவன் சங்கரிற்கும் நன்றிகள்.

என் அனுபவங்களைச் செழுமைப்படுத்திய நண்பர்கள் பலர். சிலர் உயிருடன் இல்லை. மற்றவர்களைக் காலம் நாலாபுறமும் நகர்த்திவிட்டது. இவர்களையெல்லாம் ஒருபோதும் நான் மறப்பதற்கில்லை.

என் படைப்புகளைப் பிரசுரித்த திசை, கவிதை, உள்ளம், களம், சரிநிகர், சக்தி, காலச்சுவடு ஆகிய பத்திரிகை களிற்கும் இத்தொகுப்பை வெளியிட முன்வந்த காலச்சுவடு பதிப்பகத்திற்கும் என் நன்றிகள்.

இன்று கடும் குளிர் சூழ்ந்த கனடாவில் . . . உறைந்து போனவற்றில் உயிரோட்டத்தைத் தேடியலைகிறேன். புன்ன கைத்து என் கரம் பற்றும் என் செல்ல மகள் நிரா வாழ்வை வனப்பாக்குகிறாள்.

பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே தோன்றுகிற ஒரு வினோதக் கணத்தில் வாழ்விற்கான அர்த்தம் கிடைத்து விடுகிறது.

அன்புடன்
**மைதிலி**



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | என்னுள்ளே | 13 |
| 2. | நிலவு அழுது கொண்டிருக்கிறது | 14 |
| 3. | வருகை | 15 |
| 4. | எப்போது பார்த்தாலும் | 17 |
| 5. | ஒவ்வொரு நாளும் | 19 |
| 6. | தொழிலாளர் தினம் | 21 |
| 7. | வலி - I | 23 |
| 8. | அந்த நாள் | 24 |
| 9. | மழை நாள் | 26 |
| 10. | பார்வையாளர் | 27 |
| 11. | உனது கதவு | 28 |
| 12. | குறி | 29 |
| 13. | அது உண்மைதான் | 30 |
| 14. | முடிவில் | 31 |
| 15. | இப்போதுதான் | 32 |
| 16. | போய் வருக | 33 |
| 17. | ஒரு நெருக்கடியான திரளிலிருந்து | 34 |
| 18. | இன்னொரு ஸ்பாட்டகஸ் | 35 |
| 19. | முற்ற வெளியினூடாக | 36 |
| 20. | இனி | 37 |
| 21. | அது | 38 |
| 22. | வலி - II | 40 |
| 23. | பொருள் | 42 |
| 24. | காலை | 43 |
| 25. | புரிதல் | 45 |

| | | |
|---|---|---|
| 26. | இருத்தல் - I | 46 |
| 27. | இருத்தல் - II | 47 |
| 28. | தனி | 48 |
| 29. | வாழ்வு | 49 |
| 30. | கடி | 50 |
| 31. | இசைவு | 51 |
| 32. | பயம் | 52 |
| 33. | மாலை | 53 |
| 34. | ஒரு போதுமே | 54 |
| 35. | கிலி - I | 55 |
| 36. | கிலி - II | 56 |
| 37. | தினமும் | 58 |
| 38. | கடைசி | 59 |
| 39. | தினந்தோறும் | 60 |
| 40. | நினைவு | 61 |
| 41. | பின்னரும் | 62 |




## என்னுள்ளே

ஒரு எரிமலை
குந்திக் கொண்டிருக்கிறது
ஒரு கடமைமிக்க வீராங்கனை
உலவிக் கொண்டேயிருக்கிறாள்
சிந்தனை வசப்பட்ட முகம்
தோட்டாக்கள் நிறைந்த
துப்பாக்கி விசையில்
பதிந்த விரல்
வன்மம் நிறைந்த கண்களுடன்
ஒரு சிறுத்தை ....
பாய்தலிற்கு முந்திய தோற்றம்
இவையனைத்தையும் கண்காணித்தபடி
ஒரு பிணந்தின்னிக் கழுகு
குறும்பும் சிரிப்பும் கொண்டவளாய்
கனத்த மார்புகளுடையவளாய்
நேசிக்கப்படுகிறேன் நான்.
நானோ
எனக்குரிய தருணத்தை
நோக்கியே

**1989**

## நிலவு அழுது கொண்டிருக்கிறது

நிலவு அழுது கொண்டிருக்கிறது
மெல்லிய இருளையும்
நாய்களின் ஓயாத குரைப்புகளையும்
தின்று புரண்டிருக்கும்
இரவு
சாளரத்துக் குப்பி விளக்கு
பலவந்தமாக நுழையும் காற்றுடன் செய்யும்
எதிர்ப்புப் பிரகடனம்
மேசையிலொரு அஃறிணையாய்
நான்
பசி பிசையும் வயிற்றுக்கு
உணவூட்ட எத்தனித்தால்
சன்ன அதிர்வுகளில்
தொண்டைக் குழியைக் கிழித்து விடுகின்றன
இந்தச் சோற்றுப் பருக்கைகள்
திகில் படிகிற மனதில்
பாட்டி சொன்ன கதைகளின்
பேய் உருவங்கள்
எழுச்சியுறும்
நானும் பாட்டியாய்
கதைகள் சொல்வேன் -
காக்கியாய் கறுப்பாய் உடைகொண்டு
கனத்த இரவுகளில் திரியும் பேய்கள்பற்றி . . .
காதல் என்று சொல்லி
கட்டிலில் கட்டியழுத்தும் பேய்கள்பற்றி . . .
நாய்களின் குரைத்தல் பின்னணியில்
பாழ்போயின
எம் அமைதி இரவுகள்

**1989**



## வருகை

நீ வருவாயா . . . வரமாட்டாயா ?
மீண்டும் வருவாய் என்றுதான்
மலர்கள் சொல்கின்றன . . .
மரங்களும் சேர்ந்தே
ஆனால்
மனதில் ஆறுதலே இல்லை
கடலலைகளென ஓயாத குமுறல்தான்
பனித் துளிகள் துளிகளாக
மரங்களில் வீழ்ந்தன
அந்த விசையின் தாக்குதலில்
மலர்கள் அசைகின்றன
தென்றல் இதமாக வருடுகிறது
ஆறுதல் அளிப்பது போல்
ஏதோ இரகசியங்களை
என் காதோரங்களில் அது
செருகிச் செல்கிறது
நீ எங்கள் மண்ணில்
விழுந்தாயாமே
உன் குருதி மெதுமெதுவாயோடி
நம் மண்ணை நனைத்ததாமே
எப்படி நம்புவேன் ?
இலையுதிர் காலம் போய்விட்டது

மரங்களில் துளிர்கள்
இதயம் எரிந்து
சாம்பரானது போன்ற பிரமை
மரணம் என்கிற வார்த்தை
எவ்வளவு கொடுமையானது.
நீ இறந்த விதத்தை விளக்கினால்
வார்த்தைகள் கூட
காயம் பட்டுவிடும்
நிசப்தமான இரவுகளிலெல்லாம்
நினைவுகள் அலைகின்றன
ஒன்றுமட்டும் உறுதி சொல்வேன்
உனது கனவுகள்
வெறும் கற்பனைகளல்ல.

**1989**



## எப்போது பார்த்தாலும்

எப்போது பார்த்தாலும்
ஒவ்வொரு காலையும்
அழுது கொண்டேதான்
அழுகை -
உள்ளத்தில் உறைந்திருக்கிற
கவலையைக் கரைக்கும் நீர்
ஒவ்வொரு இரவுகளிலும் கவியும்
சோகை பிடித்த கருமையைக்
கரைத்து
அழுது சோர்ந்து
முகம் வெளிறிய குழந்தையாய்
கிடக்கிற இந்தக் காலைகள்
அப்பாவி ஆத்மாக்களின்
அரற்றல்கள்
ஒப்பாரிகளுடன்தான்.
சேற்றை அழுந்திச் சென்றிருக்கிற
சப்பாத்துத் தடங்களும்
எரிந்த வயல்களும்
எல்லாமே
இந்தக் காலையில்தானே
பார்வையில் படுகிறது

வீதியெங்கும் தலையை நெருடுகிற
தென்னோலைத் தோரணங்கள்
சதா துக்கத்தைப் பிரகடனப்படுத்தும்
பறை முழக்கம்
அதனதிர்வின் பின்னணியில்
இடைவிடாது ஊளையிடும்
நாய்கள் கூட்டம்.
சங்கக் கடைகளில்
நீண்ட மனித நிரைகள்
நாளையும்
இதே மாதிரி . . .
இதே ரீதியில் . . .
அப்படியான ஒரு காலை
வேண்டவே வேண்டாம்

**1989**



## ஒவ்வொரு நாளும்

ஒவ்வொரு நாளும்
காத்திருக்கிறேன் -
நீ வருவாய் என்று
ஏதாவது ஒரு பகலின் ஆரம்பத்தில்
அல்லது
ஒரு இரவின் தொடக்கத்தில்
படலையின் கிறீச்சிடலில்
உனக்கேயுரிய
கம்பீரமான நடையின் ஓசையில்
நான் உணர்வேன்
எப்போதும்
என் விழிகள்
உன் விழிகளுள்
ஒரு சங்கமிப்பைத் தேடி நிற்கும்
பின்
புறக்கணிப்பின் எதிரொலியாய்
மெலிதாய் மனம் விசும்பும்
என் வீட்டு வாசலில் நிற்கும் மாமரம்
என் வீட்டு மதிலில் உட்காரும் காகம்
வேலியோர இப்பில் இப்பில்
இவற்றிற்கும் எனக்குமுள்ள வேறுபாடு
உனக்குத் தெரிவதில்லையா?
உன் வீட்டு மரங்களிலெல்லாம்

பாடித்திரிகிற குயிலின் குரலை
நீ கேட்டதில்லையா?
அதன் குரலில்
என் உணர்வுகளின் இசைவை
கவனித்திருக்கிறாயா?
ஒரு செவ்வந்தியின் அழகு
உன்னை வியக்க வைத்த விதத்தில்
ஒரு மல்லிகை
உன் மனதைப் பறித்த விதத்தில்
என்னைப் பற்றிய எண்ணங்கள்
உள்மனதில்
சலனத்தை எழுப்பாதா?
கவிதைகளை வாசிக்கையில்
நித்திய கல்யாணி மலர்களைக் காண்கையில்
தனிமையான பகலில்
அல்லது
நிசப்தமான இரவில்
என் ஞாபகம் உனக்கு வருகிறதா?

**1989**



## தொழிலாளர் தினம்

திரண்ட சேற்றுள் புதைந்திருக்கும்
உன் கலப்பை
மீண்டும் பரிசீலனை செய்யப்படும்
உனது வியர்வைத் துளிகளை நீ
கடலுக்கடியில் போய்க் கண்டுபிடி
சாக்குருவி அள்ளி விசிறிய
உன் கனவுகளை
ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி எடு
உனது பூனையோ
அடுப்பு மேடையில்
சாகக் கிடக்கிறது
அரிசிப் பானைக்குள்
பெருச்சாளி நாட்டியம்
தொழுவத்திலுள்ள எலும்புகளை
எருதுகளாக அடையாளம் காண்
உனது அருமை மகள்
குழிந்த கண்களோடு
துயில்கிறாள்
வயலில்

எரிந்து முடிந்து கொண்டிருக்கிறது
உன் மனைவியின் சிதை
ஏய் . . . தோட்டக்காரா !
நாளை தொழிலாளர் தினம்
நீயும் நினைவு கொள்ளப்படுவாய்
உன் சிந்தனையை அடகு வைத்தால்
பொன்னாடைகளும்
புகழ்மாலைகளும்
கொண்ட விருந்து
இத்தனையும் போதுமா என்று
முதலாளி தந்திரப் புன்னகையுடன்
உபசரிப்பான்
மறுநாள் காலை
என்றும் போலவே
சாட்டை சொடுக்கப்பட்டிருக்கும்
உனது வயிறு பசித்திருக்கும்
உடைந்துபோன கலப்பையும்
நைந்து போன கச்சையுமாய்
களத்தில் கதிரறுக்கக் கடவாய்
உன் கூனல் முதுகில்
கதிரவன் ஏறிச் சவாரி செய்வான்

**01.05.90**

## வலி - I

முள்ளொன்று காலினுள்
குத்திப் புதைந்து விட்டதே . . .
என்ன செய்வதாக உத்தேசம்?
நாட்கள் போக
உள்ளே ஒளிந்து கொண்டு
உயிர்போகும் வலி கொடுக்கும்
பிறகென்ன . . .
கட்டி சீழ்
காயம் வலி.
விடாதே
உடனேயே எடு
ஊசி முனையின் சுடர்
‘பிளேட்’ என்றாலும் பரவாயில்லை
சிறுகத்தி அனைத்திலும் சிறப்பானது
கிண்டு, கிழி
சிறிதாய் வெட்டு
இரத்தம் வரும்
வலிக்கும்
முயற்சியை விடாதே
காயம் பெருக அனுமதியாதே
வலியைப் புணர்
முள்ளை அகற்று

**20.08.90**

## அந்த நாள்

பல ஒளிமிகுந்த நாட்களிலும் மேலாகக்
கசப்பற்ற நாள் ஒன்றை
தெரிவு செய்வதில்
நான் பெருமைப்படுகிறேன்
அது விட்டில்கள் பறக்காத நாள்
முகப்பு வாயிலில் கவிகிற
ஈக்களை விரட்டுகிற நாள்
பல்லிளிக்கிற தெரு மனிதரையும்
அருவருப்பான பேச்சுக்களையும்
தவிர்க்கிற நாள்
உன்னி உன்னிக் கூர்மையடைந்து
கத்தி பாய்ச்சும் கண்களிலிருந்து
அந்த நாளைப்
பொத்தி வைப்பேன்
சமையலறைக் கதவுகளை உதைந்து
புகைமண்டிய விழிகளினால்
என்னைத் தேடுவேன்
இறுகி இறுகிக் கட்டிய
சேலைகள் சட்டைகளை
உரிந்தெறிந்து பின்
ஒவ்வொரு அங்கங்களிலும்
என்னை நான்
காண முயல்வேன்

அந்த நாள் -
என் வளையல்கள் நொறுங்கும்
கொலுசின் மணிகள் சிதறும்
கழுத்தை அண்டும் நகைகள் அகலும்
இதுநாள் வரையும்
அநுமதியின்றி
என்மீது அழுந்தி அழுத்தி
அமுக்குகிற முரட்டுத் தேகத்தை
வெறுப்பேன்
சபிப்பேன் அதை நான்
சோற்றுப் பருக்கைகளிற்காகக்
கூச்சலிடும் இதழ்களுக்கிடையே
அந்த நாளை
பதுக்கி வைப்பேன்
எந்நேரமும்
என்னுள் அமுங்கி
என்னை நான் கண்டெடுப்பேன்
பின்
அந்த நாள் என்னைத் தேடிவரும்

**21.12.90**

## மழை நாள்

பச்சையிலை மீது படர்ந்த
மழையின் சத்தம்
உன் முத்தத்தை
நினைவு படுத்தியது.
அது ஈரமும் இனிப்புமானது
காற்று வீச்சில் துளிர்த்த
துளிகளின் அழுத்தத்தில்
புல்லின் சிரிப்புகள்
புற்களின் தலைதேங்கும்
நீரின் துளிகளை
ஊரும் தும்பிகள்
ஈரிப்பில் சடசடக்கிற
பறவைகளின் ஒலிகளை
உள்வாங்குகிற காற்று
உன்னையெண்ணித் துடிக்கிற
என் கவிதை
காகித வெளியில்
மைத்துளிக் கசிவென
நீ
மரநெருக்கமாய் ஒண்டிக்கொண்டிருக்கிற
புறாவின் குறுகுறுப்பின்
மர்ம வசீகரம்
நீ
திடீரென
நானே மழையாய்
நானே வெளியாய்
பரவசம் ஊறித் ததும்புகிறது.
நினைவுகள் நீருண்டு கிளர்கிறது
எது முதலில்
உன்னை நெருங்கும்?
ஏக்கந் ததும்பும் என் பாடல்களா
அல்லது
ஈரச்சிறகின் ஓசை நயங்களா?

**1990**

## பார்வையாளர்

அந்தக் கும்பலின் இடையில்தான்
முதலில் உன் அறிமுகம்
நடுவில் சரிந்திருந்த இளைஞனின்
இரத்தத்தால் ஊறிய தேகமோ அல்லது
அப்போதுதான் அவனில்
மலரத் தொடங்கிய
மீசை அரும்போ
கன்னத்தில் பதிந்திருந்த
காயத்தின் சுவடுகளோ
எதுவென்றே தெரியவில்லை
என் மனதில் தோன்றிய
உணர்ச்சிக் குறுகுறுப்பை
உன் கண்களில் கண்டபோதுதான்
பரிச்சயமானது உன் நிழல்
இன்றும்
கும்பலில் நீ
நானோ அந்த இளைஞனானேன்
கசிந்த விழிகளும்
உணர்ச்சிக் கனலுமாக
நீ
அத்தியாயங்கள் தொடர்கின்றன
ஆனால்
உன்னால் முடிந்ததெல்லாம்
அதுவேயாக

**1990**

## உனது கதவு

உனது கதவு
எந்நேரமும் ஏன்
மூடிக் கிடக்கிறது?
மென்மௌனம்
உதடுகளைக் கடித்தபடி விம்மல்
அழாதே... தயவு செய்து அழாதே
நீ செய்ய வேண்டியதெல்லாம்
ஒன்றுதான்.
அந்தக் கதவைத் தட்டு
உன் விரல்கள் ஒடியும் வரை
பின்
எஞ்சியுள்ள நகங்களாவது
அதைச் சுரண்டியபடி இருக்கட்டும்
உனது இருத்தலை உணர்த்த
இப்போதைக்கு அது போதும்.
அவர்களின் செவிப்பறைகளிற்கு
இது துன்புறுத்தல்
அவர்கள் ரசித்துக் கேட்கிற
இசையின் பின்னணியில்
மதுக் கிண்ணங்களின்
கடூர உரசல் சப்தங்களிடை
அந்தச் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கட்டும்
காதல் வார்த்தைகள்
உன்னை
மயக்கும் போதும்
அன்பு அணைப்புகளில்
நீ கட்டுண்டிருக்கும்போது கூட
அந்தக் கதவைச் சுரண்ட
ஒருபோதும் மறவாதே
ஏனெனில்
திறக்கப்படக் கூடிய அறிகுறிகள்
எதுவுமற்ற கதவு அது.

**1990**



## குறி

எல்லாமே முதிர்ந்த விசித்திரங்கள்
சுயதரிசனங்கள் -
மிகக் கொடியவை அவை!
ஒவ்வொரு முகத்தின் பின்னும்
எத்தனை விதமான மிருகங்கள்...
தினந்தோறும்
எத்தனைவித
பிறாண்டல்கள்
நகக்கீறல்கள்
சீழ்வடிந்த
பொருக்குத்தட்டிய
காயங்கள்
ஒவ்வொரு கணமும்
ஒவ்வொரு மிருகமும்
இரைதேடி
குறி பார்த்து
பாய்ச்சலிற்குப் பதுங்கி...
எந்த நேரத்திலும்
தாக்கலாம்
வார்த்தைகள் பற்களாகும்
குரல்வளை நாராகக் கிழிபடும்படி
அப்பாவியான முகங்களின்பின்
முட்டும் எருமை
படமெடுத்தாடும் சர்ப்பம்
அட்டகாசமான முகங்களின்பின்
சாதுவாய் அசைபோடும் பசு
கொஞ்சும் புறா
இருக்கலாம்
இல்லாமலும்
இருக்கலாம்
எந்த முகமூடியுள்
எந்த மிருகமோ

**1990**

## அது உண்மைதான்

அது உண்மைதான்
எனக்குத் தெரியும்
உறவுகள் சாசுவதமானவையல்ல
ஈரத்தில் ஒட்டிக் கொள்கிற
புற்கள் போன்றவையவை.
கலங்குகின்றன உன் விழிகள்
தலையை வருடுகின்றன கரங்கள்.
இது ஒன்றும்
விசேடமானதல்ல எனக்கு
நீ நடக்கிற பாதையில்
ஒரு மரத்தைக் கடக்கிறாய்
அவ்வளவேதான்.
மரங்களைப் போல
மனிதர்
எதையும் ஞாபகம் கொள்வதில்லை
கடந்த காலத்தின்
கவர்ச்சி பொங்கும் சுவடுகள்
இந்தவொரு சோகப் பார்வையில்
சிதைபடல் வேண்டாம்
நன்றி
போய் வா
அமைதி இரவில்
காற்றில் அலைபடும் பாடலாய்
கரைகிறது வாழ்வு!

**1990**



## முடிவில் . . .

போய் வா . . .
இருள் கவிகிற மாலையில்
அலைகள் கரை நெருங்கி
உனக்கொரு
வாழ்த்துச் செய்தி அனுப்பும்
எனது அருமை நண்பர்கள்
அழகிய வானம்பாடிகள்
அவர் பிரிவு
நிரந்தரமாக்கப்பட்டது
நீயோ
சுதந்திரமாகச் சுற்றித் திரிகிற
ஒரு சிறு வண்ணத்துப் பூச்சி
காற்று மட்டுமே துயில்கிறது
உன் இடைவெளியில்
நான் உன்னுடன் கூடிவரல்
சாத்தியமற்றது
நான் என் நண்பர்களின் நினைவு
அவரெண்ணங்களின் பிரதியுரு
மற்றும்
அவர்தம் பாடல்களின் அருவம்
இவையனைத்துமே
என்னால் சுமந்து செல்லப்படல் வேண்டும்
இடையில் நீயோ
பிரிவு சொல்லித் துடிக்கிறாய்
துயர் கொண்டதுன் பிரிவு
எனினும்
விடை கொள்வோம்
நீ புன்னகையின் உறைவிடம்
நான் நம்பிக்கையின் எதிரொலி
விசுவாசமுள்ள செயல்கள்
செய்ய முடிந்தால்
அவ்வேளைகளில் மட்டும்
என்னை நினைவு கொள்

**1990**

## இப்போதுதான்

இப்போதுதான் அந்தச் சிட்டுக்குருவி
ஊருக்குள் நுழைந்திருக்கிறது
முளைகள் தெரிந்த மரத்தைத் தழுவிய
காற்று
மெதுவாய் வந்து
சோகம் விசாரித்துப் போனது
பூக்களின் மணங்கமிழல்
பொய்த்துப் போனது
கால் போன போக்கில்
தோட்டக்காரன் போய்விட்டான்
வயலின் சரிவில்
தின்றுகொழுக்கும் கால்நடைகள்
ஜோதிடக்காரன் மூட்டைகளை
முடிந்தபடி -
சகுனம் சரியில்லையாம்
பக்கத்து வீட்டுக்காரர்
ஓடோடிச் சென்று
கதவிடுக்குகளில் முகம் வைத்தனர்
தொலைவாய் நகரும் மேகங்களிடை
தழலாய் எரியும் சூரியன் முன்
எதிராய்ப் போகிற துணிவுடன்...
குருதி நிறைந்த சிறகுகளைக்
கோதிக் கொண்டிருந்த போதுதான்
முளைகள் தெரிகிற
மரத்தைத் தழுவிய காற்று
மெதுவாய் வந்து
சோகம் விசாரித்துப் போனது.

**1990**



## போய் வருக

ஒரு குறைமாதச் சிசுவின் அசைவென
அவன் நினைவு
இன்னும் நெருக்கமாய்
இரவுகளில் மட்டுமே ஒலிக்கிற
பறவையின் கதறலென
மிகவும் துயர் மிகுந்ததாய் அது
நினைவு கூரப்படுகிறது
உயர்ந்த மதிலைத் தாண்டிக் குதிக்கிற
உதய ஒளியிலும்
நிசி நேர நிலவிலுமிருந்து
அது இனி மறைந்து விடும்
அலைகளில் ஈரம்
கரையும் வரைக்கும்
அன்பே
நாம் இணைதல்
அசாத்தியம்
மணலில் பதிந்த சுவடுகளனைத்தையும்
காற்று கௌவித் தின்னட்டும்
எஞ்சியவை -
ஒரு சொல்
ஒரு முத்தம்.

**1990**

## ஒரு நெருக்கடியான திரளிலிருந்து . . .

ஒரு நெருக்கடியான திரளிலிருந்து
நான் பிதுக்கி எறியப்படுவேன்
என்மீது சுமத்தப்படுகிற
பாரவண்டியோ
அசுத்தமானது
பழைய குப்பைகளே
சித்தாந்தங்களென நிரம்பப் பெற்றது
சுரீரெனத் தரப்படும்
வலியுடன் அச்சுறுத்தும்
சவுக்கடிகளின் போதும்
என் தலை தாழ்ந்தே இருந்தது
பறந்து கொண்டிருக்கிற
வல்லூறுகளின் நிழல்
முதுகில் படும் போதெல்லாம்
மூர்க்கம் என் சேமிப்பையடைந்தது
நாற்றமுடை நிறைந்த கிடங்குள்
நானிருப்பினும்
மூர்க்கம் மிகுந்த எதிர்த்தாக்குதலிற்கென
சுதந்திரம் பீரிட்டெழுகிற
ஆன்மாவை
நான் பெற்றுள்ளேன்

இனியென்ன ?

அதிகாரம் செலுத்துதலின்
ஆளுமைக்குட்பட்ட
ஒவ்வொரு பிரசவத்திலும்
என் பிரவேசம்
இருத்தல் கொள்ளும்

**01.01.91**



## இன்னொரு ஸ்பாட்டகஸ்

ஸ்பாட்டகஸைப் பற்றிய எனது பார்வை
விரிந்து வருகிறது
சாம்பற் புழுதியுண்ட கண்கள்
நாள்தோறும்
அவனை அவதானிக்கின்றன
எப்போதும் உருவகிக்கப்படும்
உருவிலிருந்து
நான் விடை கொள்கிறேன்
சுருண்ட கூந்தற் சிக்குகளிலிருந்து
நான் வெளியேறிச் செல்வேன்
கிணற்றங்கரை அழுக்குத் துணிகள்
குவியலாகட்டும்
நீர் சுமக்கும் பாத்திரங்கள்
வெறுமையாக முழிக்கட்டும்
காமம் மிகுந்த
கண்களும் கைகளும்
வெற்றிடத்தில்
வெறிகொண்டு அலையட்டும்
கிழிந்த வாய்களிலிருந்து
வெளித்தெரியும் கோரப்பற்களிலிருந்து
வம்புப் பேச்சுக்களிலிருந்து
எனக்கான பொறிக்கிடங்குகளிலிருந்து
நான் தப்பிச் செல்ல வேண்டும்
தினமும்
ஸ்பாட்டகஸை நோக்கிய என் பார்வை
விரிந்து வருகிறது.

**12.01.91**

## முற்ற வெளியினூடாக

முற்ற வெளியினூடாக
பண்ணைக் கடற்கரையிலிருந்து
வீசும் காற்று
அடுப்பினருகிருக்கும்
உன்னில் சலனமில்லை
சூரியன் நகரெங்கும்
தாவித் திரிகிறான்
கூட்டப்பட்டிருக்கிற
முற்றத்தை நிறைக்கும்
பூக்களின் மணம் . . .
கடற்கரை உப்புக்காற்றை முகர்ந்த
புற்களின் வாசனை . . .
அனைத்தும் புறக்கணிக்கப்பட்டதாய்
தூரத்தில் உறுமுகிற குரல்கள்
பெண்களின் கிளர்ச்சி ஊர்வலங்கள்
விபரங்கள் வெறும் செய்தியாகவே
வீதியில் உக்கிரமான கோஷங்கள்
உன்னைப் பற்றிய அறிதலின்றி
உன்னையவை
ஒருபோதும் நெருங்காது
கறியுள் உப்புச் சுவைதந்த
திருப்தியற்ற முனகலும்
வேலைப் பழுவின் நீண்ட பெருமூச்சுமாய்
ஆனால் -
தெரிகிறதா பெண்ணே
உன் வாசலைக் கடந்து
போய்க்கொண்டிருக்கிறது
ஒரு கிளர்ச்சி ஊர்வலம்

**31.10.91**



## இனி

பிறக்கப் போகிற
இந்த இருபத்தோராம் நூற்றாண்டில்
எனக்கு என்ன வேண்டும்?
கடந்த வருடங்களில்
என்முன்
நீட்டப்படாத தட்டுகளிலிருந்து
எடுக்கப்படாத இனிப்புகளை
அடைய முயல்வேன்
இதுவரை
மனதைக் கிறங்கடிந்த
புகழ்மாலைகளின் சுமையில்
ஒடிந்து ஒடுங்குதல்
நடவாது
இதம் தரும் ஸ்பரிசங்களும்
வாசகங்களும்
மயக்கிய காலம்
இனி இல்லை
என் உடலசைவுகளைக்
கோடுகளென முறுக்கிப் போட்ட
ஓவியன்
போதையாய் இசைத்த
கவிஞன்
ஆதாயம் தேடும் கலைஞர்கள்
யாவரும் தம்
ஆதாரத்தை இழப்பர்
இந்த நூற்றாண்டு
இப்படி அமைய வேண்டும்
பல கண்களிற்கு
கனவுகளிற்கு
கதவுகளிற்கெல்லாம்
திறப்புகள் கொணர்வதாக

**21.11.91**

## அது

இரவின் விழிப்பிலும்
பகலின் கனவிலும்
ஓங்கி என்னை உசுப்புகிற குரல்
கதறி என்னை அழைக்கிற குரல்
கனன்று என்னில் கவிழ்கிற குரல்
இவை
என்மேல் எந்நேரமும்
ஊர்ந்தபடி
செவிப்பறை கிழியுமளவு
சித்திரவதைக்கின்றன
உள்ளே
மன ஆழத்தில்
சுரண்டி
நிமிண்டி
சிந்தனையைக் குடைந்து
மனதுள் மடிய மறுத்து
ஓங்கியழும் குரல்கள்
அவற்றைக் கேட்டல் சாத்தியம்
எனினும்
இக்கணமே
சொல்ல முடியுமோ
மீண்டும்
இரவின் விழிப்பும்
பகலின் கனவும்



கேள்விகள் நிதமும்
என்மீது விழுந்து குதற
காரணகாரிய அறிதலில்
என்னை நினைத்து
ஒடுங்கல் நிகழும்
எப்போதும்
என்னைப் பற்றிய அச்சம்
அந்தக் குரல்கள் பற்றிய அச்சம்
மற்றைய செவிகள் பற்றிய அச்சம்
உள்ளக் குழம்பல்களை
உமிழப் பயந்து
உள்வாங்கி ஒடுங்கல்
நத்தை போல சட்டெனச் சுருங்கி
ஒடுங்குதலா வாழ்வு?
சிந்தைதனை மறைத்து மறந்து
சிட்டெனப் பறப்பதுவா வாழ்வு?

**02.12.91**

## வலி - II

வயிற்றை அழுத்தும் சிசு
கல்லாய்க் கனக்கிற மார்பகங்களை
கையிலேந்தியபடி கதறுவாய்
‘முக்கு முக்கு
முக்கித் தள்ளு’
ஒரு மகப்பேற்று மருத்துவரும்
கிழட்டுத் தாதியும்
அறைக்கு வெளியே உன்
அன்பான கணவன்
ஆவல்மிக்க காலடியோசைகள்
‘முக்கு முக்கு
சீக்கிரம்’
அதட்டல் தொடரும்
உன் கண்களில்
மின்னல் தெறிப்புறும்
கன்னப் பொருத்துகள் நடுக்கமுறும்
அகல விரித்த கால்கள் விறைக்கும்
இடுப்புச் சரிவு அடிவயிற்றையும்மீறி
தொடைகளின் நடுவினூடாக
உயிரைப் பிளக்கிற
வலிப்புச்சுழி



உதடுகளைத் தின்கிற பற்களை மீறி
ஓலமிட்டழுகிறது உன் குரல்
இனி
தொடை நடுவு கிழிபடும்
உன்
இத்தனை நாளைய
சுமப்பும் நோவும்
வேதனையுடனான வீறிடலும்
அர்த்தமிழந்து போக
வெறும் ஆவலுடனான
பாதச் சரசரப்பொன்றே
முதன்மையுறும் வகையில்
உன் தொடைகளின் நடுவே
இரத்த வெள்ளத்தில்
ஜனிக்கும் சிசு.

**12.05.92**

## பொருள்

நீண்டு தொங்கும்
வெப்ப இரவு
பூச்சிகளை
முக்கிக் கனக்க வைக்கிறது
காற்றுச் சிணுங்கலில்
பக்கத்து வீட்டு ரேடியோவின்
சின்ன அலறல்
கனமிக்க கைப்பிடியில்
நொறுங்குகிறது உடல்
வியர்வை பொங்கி வழிய
அழுத்தல்
வருத்தல்
முத்தமிடல் கூட ஆவேசமாய்
அவன் தனது பேனாவால்
தாள்களில் கிறுக்குவதுபோல
தனக்குரிய சீப்பால்
தலையை அழுத்தி வாரிக் கொள்வது போல
தாடியைச் சீவுகிற சவரக் கத்தியை
கவனமாகக் கையாள்வதைப் போல
எல்லாம் முடிந்து
அமைதியாய் தூங்குகிறான் அருகே
என் இத்தனை நாளைய
காதலும் கனிவும்
இதந்தரு மென்னுணர்வுகளும்
பொங்கியெழுந்த குறியின்முன்
ஒழுகிக் கிடக்கிறது
கட்டிலின் கீழே

**12.05.92**



## காலை

நிம்மதியைத் தொலைத்த இரவுகளினதும்
கலங்கித் தெளிந்த பகல்களினதும்
கலவையாய்
ஒரு நேரத்தைத்
தேர்ந்தெடுத்தேன்
அது ஒரு அருமையான விடியல்
உயிரோட்டமான காலை
அதனை அஸ்தமனமென்பர்
அறியாத மூடர்
காலை எனக்கு இதமானது
கூவும் சேவல்கள்
பாடும் பறவைகள்
சுயநினைவடையச் செய்கின்றன
இரவுகளில்
என்னை இறுக்கிய
முடிச்சுக்களை அறுத்தெறிவேன்
கலவரந்தாங்கிய
கண்களைக் களைவேன்
புதிய
சிந்தனை தூண்டும் பாடல்களை
இசைப்பேன்
விகாரமிகு பார்வைகளை
விலக்கி வைப்பேன்

சிநேகப் புன்னகைகளைச்
சேகரிப்பேன்
தூரமாய் குரல்கள்
என்னை அதட்டும்
எச்சரிக்கும்
கொடிய அக்குரல்களின்
இரக்கமற்ற கட்டளைகளை
அலட்சியப்படுத்துவேன்
இதனை
அஸ்தமனமென்போர்
அறியாத மூடர்
நானோ
என்னை விழித்தெழவைக்கிற
காலையைப் பற்றி
உரத்துப் பாடுவேன்

**13.05.92**

## புரிதல்

உடைந்து தொங்குகிற கையாய்
வலிமிகுந்ததுன் நினைவு
அசைத்தல்
அகற்றல்
வேதனை தருவது
குழந்தையாய் மிரள்கிற
மனதை
சமாதானப் படுத்துகிற
ஒரு வார்த்தை தன்னும்
உன்னிடமில்லையா?
சன நெரிசலும்
சத்தமும் மிகுந்த
தெருவில்
சொல்லிக் கொள்ளாமலேயே
பிரிந்து சென்றானவன்.

**17.06.92**

## இருத்தல் - I

இந்த நிமிடம் வரைக்கும்
உன்னிடம் சேர்ப்பிப்பதற்கென
எந்தச் செய்தியுமில்லை
எனினும்
உன்னுடனான உரையாடலை
தவறவிடுவதில்
எனக்குச் சம்மதமில்லை
மழையையோ இருளையோ
பொருட்படுத்தாது
உனக்கென நான் நினைத்த
நாள் இது
நீ சொல்லவே நினைத்திராத
விஷயங்களையும்
உன்னிடம் ஒருபோதுமே
இருக்கச் சாத்தியமற்ற
புத்தகத்தையும்
பெற்றுக் கொள்ள எண்ணுவேன்
கடிகார முள்ளசைவிற்கும்
காலடியோசைகளிற்கும்
இடையில்
கரைந்திழுபடும்
என் காதல் மனம்

**10.08.92**

## இருத்தல் - II

உனக்குரியதான
மாலைப் பொழுது
இருளில் சலனமின்றிக்
கரைந்து போயிற்று
இருந்தோரே உணர்வர்
இருத்தலின் மகத்துவம்
இவ்வாறுதான் போலும்
பொழுதுகள்
சோபை குன்றுகின்றன
யாரும் யாருக்காகவும் காத்திருப்பதில்
பிரியப்படுவதில்லை
அது அர்த்தமற்ற இருப்பெனில்
எவருடைய அநுமதியுமின்றி
அவருக்காகக் காத்திருப்பதில்
சுகமும் உண்டு
சோகமும் உண்டு
கடைசியில் எஞ்சுவனவெல்லாம்
சிதைபட்ட உணர்வுகளேயன்றி
வேறென்ன?
சொல்ல நினைத்ததை
சொல்லாமலும்
எழுத நினைத்த கவிதையை
எழுதாமலும்
விட்டுவிடலாம்தான்
மரிபடும் உணர்வின் பெருந்துயரென

**11.08.92**

## தனி

எனது கூட்டினுள் எவருமில்லை
பச்சை வயல்வெளிகளை
வல்லை வெளியினைத் தாண்டி
தனித்த என்
சைக்கிள் பயணம்
தூரத்துக் காட்சிகளில்
குருவிகள் பறந்தன
எண்ணங்களைப் பகிர எண்ணி
புருவ உயர்வுடன்
வாய்க்குள் அடைபட்டிருந்த
வளியை உமிழ்கையில்
உணரப்பட்டது
என் தனிமை
இன்று கூட வந்தது
காற்று மட்டும்தான்
எதையுமே பகிரத்துடிக்கிற
எனக்கு
தனிமை வேதனை தருவது
மிகவும் கொடுமையானது
ஆனாலென்ன
மாற்றங்களை
ஜீரணிக்கக் கற்றுக் கொள்கிற
கெட்டிக்கார மனது
கடற்கரைக் காற்றதிர்வில்
கண்மடல்களில் படிந்து
கரைந்தொழுகுகிறது உப்பு
தொலைவில்
எத்தனைப் பறவைகள்
பெயர்களை யாரிடம் வினவ?
எனக்காக ஒரு பறவை
தூரமாய் காத்திருக்குமா?
வளர்மதி!
இன்றுனை நான்
சந்திக்க முடியுமா?

**20.11.92**

## வாழ்வு

எத்தனை முறை நான் இறந்திருக்கிறேன்?
எனக்கு ஞாபகமில்லை
எத்தனையோ முறையாக இருக்கலாம்
எனது மரணம் பற்றிய விருப்பு
என்னிடத்தில் இல்லை
குறிப்பாக
யாரிடத்திலுமுள்ளதாகவும்
தெரியவில்லை
நண்பர் கோபக்காரர்
உறவினர்
தெரிந்தவர் தெரியாதவர் என
யாராவது ஒருவர்
திடீரென
வலுக்கட்டாயமாக
மரணத்தை
என்மீது திணித்துவிட்டுப்
போய்விடுகிறார்கள்
இப்போதும்
என் ஆன்மா
மெல்ல . . . மெல்ல இறந்தபடி
எனினும்
ஒவ்வொரு கணமும்
உயிர்த்தெழும் நம்பிக்கையும்
விருப்பும் நிறைந்த
மனது.

**24.11.92**

## கடி

கடிப்பதன் காரணத்தினால்தான்
முதலில்
சொறியத் தொடங்குவது
பிறகு
தோல் உரிவு
இரத்தக் கசிவு
எரிவு
சில சமயங்களில் தழும்பு
கடித்தால் சொறியாதே என்கிறீர்கள்
எப்படி?
கடித்தாலும் சொறியக்கூடாது
என சில சமயங்களில்
நான் நினைத்தாலும் கூட
கடிக்கும் போது
சொறிந்து விடுகிறேன்
கடித்தால் யாருக்கும்
சொறியத்தானே சொல்லும்

**13.03.95**



## இசைவு

பலதிசைகளிலிருந்தும் துரத்தப்படுகிறேன்
அகப்படுவது திணறலாய்த்
தெரிந்ததில்
ஓடுவது சாத்தியமாயிற்று
சில நேரங்களில் சிந்திப்பேன்
ஓடுதல் என்பது
ஓட்டத்துடன் சம்பந்தப்பட்டதா
அல்லது
துரத்துதலுடனா?
சில நேரங்களில் உணர்கிறேன்
அன்பு என்பது
கட்டுக்களுடன் சம்பந்தப்பட்டது
கட்டுகள் உடைபடும் போதெல்லாம்
அன்பு சிதறிப் போகிறது
நண்பனே,
புல்லாங்குழலிசை கேட்டிருக்கிறாயா?
அது துவாரங்களுடன் மட்டுமே
சம்பந்தப்பட்டதல்ல
ஊதுதல் அழுத்துதல்
எல்லாவற்றிற்கும் அப்பால்
இசைத்தல் என்பது மிக
உயிர்ப்பானது
துவாரங்கள் அடைபடும் போதெல்லாம்
துயரமாய் வழிகிறது
என் இசை.

**13.03.95**

## பயம்

எதிர்பார்த்திருக்கையில்
ஏமாற்றம் பற்றி
இயலாமையில்
செயல் பற்றி
அன்புற்றிருக்கையில்
அடங்குதல் பற்றி
அடங்க மறுக்கையில்
அன்பு பற்றி
வானத்தை நினைக்கையில்
சிறகுகள் பற்றி
சிறகுகளை விரிக்கையில்
உறவுகள் பற்றி



## மாலை

காற்றிடையுதிரும் இறகுகளென
சலிப்புற்ற மனதிலிருந்து
பீரிட்டெழும் பிரார்த்தனைகள்
நான் உன்னை நேசிக்கிறேன் . . .
உன்னை
கனவுகள் கருணையவற்றவை
ஒருபோதுமவை எனக்கு
இரக்கம் காண்பிப்பதில்லை
இதயத்தின் இடுக்குகளில்
எஞ்சியவற்றைக்கூட
சீழ்மூடி விடுகிறது
காலம்
வடுக்களை
முகத்தில் விட்டெறியும் போதெல்லாம்
நான்
மௌனமாக
பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருப்பேன்
பெரிய கோயிலின் துருவேறிய மணிக்கூண்டு
அழும்போது
இலைப் பறவைகள் தூங்கும்போது
மிகவும் சஞ்சலமடைகிறேன்
மாலை நேரங்கள் துயருடன் கழிகின்றன
இரவுகளில் ஓயாது புலம்புகிறது மழை
திறந்து வைத்த மரக்கதவுகளில்
ஓங்கியழுகிறது காற்று
கொட்டும் பெருமழையில்
காற்றலையும் வெளியில்
அறுந்து போன
இழைகளைப் பொருத்தி
உனக்கான துயர்கீதத்தை
எப்படி இசைப்பேன் நான்.

**16.03.95**

## ஒரு போதுமே

ஒரு போதுமே
நான் இப்படியாக
எதிர்பார்த்திருக்கத் தேவையில்லைதான்
காலம் ஒரு கரும்பூதம்
சபித்து விடுகிறது மனிதர்களை
கருணையின்றி
எவ்வளவு இயல்பானதாக
எவ்வளவு எளிமையாக
அனைத்து வார்த்தைகளும்
கரைந்து போனபின்
தொடுகைக்கப்பால் விரியும்
வான்வெளி பார்த்து
சொல்ல என்னவுண்டு புதிதாக?
சாவெய்திய ஆன்மாவின்
கடைசி நேரத் துடிப்புகளை
வாழ்வின் கண நேர நுண்மைகளை
இனி எங்ஙனம் நானுனக்கு
உணர்த்த முடியும்?
வாழ்வின் அனைத்து அம்சங்களை
பரஸ்பர அன்பை
கடவுளரின் முன்னிலையில்
நினைவு கூர்வோம்
பொழியும் நிலவில்
விழிநீர் துடைத்து
ஒரு முத்தத்தைப் பகிர்ந்தபின்
விடை கொள்வோம்.

**16.09.95**

## கிலி - I

சத்தங்களனைத்தையும்
விடாது மென்று
உப்பிய வயிறு கொள்ளும்
பகற்பொழுதுகள் அருமையானவை
அதன் வெளிப்படைத் தன்மை
போற்றத்தக்கது
சாம்பல் நிறத்திற்குட்டவையனைத்தும்
சஞ்சலங்களை மட்டுமே குறிப்பதாகலாம்
சாவைத் தவிர்க்க முடியவில்லை
இரவானால்
மூச்சு நின்று விடுகிறது
இறுகப் பூட்டப்படும் கதவுகளுள்
என்னமாய் வியர்த்துப் போகிறது
காற்று
மூத்திரப்பை நிரம்ப
முழித்திருந்து கவிதைகள் படித்த காலம்
இனி
ஒருபோதுமே
வாசித்து முடியாது போலும்
சிறு அசைவுகளைக் கூட
காணப் பொறாது
இரவை
சிடுசிடுக்கிறாள் அம்மம்மாக் கிழவி
நித்திரை வராத நேரங்களெல்லாம்
நிலவு நாட்களைப் பற்றிய
நினைவுகளில் கழிகிறது
இன்று -
அருகிருந்தணைத்து
முலைபற்றும் கணவன் பிடியிலும்
உயிர்ப்பில்லையென.

**03.09.96**

## கிலி - II

எல்லாமே பழகிப் போய்விடுகிறது
நீண்ட இடைவெளியின் பின் சந்திக்கிற
நண்பர்களுடன் கூட
அமைதியாய்
ஒன்றிரண்டு வார்த்தைகள் கொண்ட
உரையாடல்களைக் கூட
தொடர முடியவில்லை.
நான்
தினமும் கோயிலுக்குப் போகிறேன்
ஆளரவம் குன்றிப்போன மாலை நேரங்களில்
உயர்ந்து தனித்த சுவர்களினுள்
பூட்டப்பட்டிருக்கிற
கதவுகளின் முன்நின்று
நடுங்கும் மனத்தினளாய்
பிரார்த்திப்பேன்
கசப்புற்ற இரத்தங்களுள்
அமிழ்ந்து கிடக்கிற
இதயங்களை நினைத்து
ஏங்குவேன்
மன்றாட்டமாய் அழுவேன்
இரத்தம் கடும் சிவப்பு நிறமானது.
இவ்வெண்ணம்
எனைக் கிலி கொள்ள வைக்கிறது.
குளிர்மையான
வேறெந்த வர்ணங்களுமற்ற
தனித்த கறுப்பு நிறங்கொண்ட
நாய்களை வெருட்சியாய் குரைக்க வைக்கிற
இரவு நேரங்கள்
சலிப்பைத் தருகின்றன
அர்த்தமற்ற பயங்களுடன்
களைத்துப் போவதால்
இரவில்
எதனையுமே செய்ய முடியவில்லை
ஒரு புத்தகத்தை வாசிக்க
மறந்து போன தோத்திரங்களில்
ஒன்றைத்தானும்
நினைவு படுத்த
இரத்தம் சிவப்பானது என்ற எண்ணம்
எப்போதுமே என்னை
கிலியுள் ஆழ்த்துகிறது
அதைவிட அதிகமாக
நாய்களின் குரைப்புகளடர்ந்த
நெடும் இரவுகள்.

**03.09.96**

## தினமும்

ஏனோ தெரியவில்லை
சந்தேகமாய்
ஒவ்வொன்றுக்கும்
காரணம் கேட்கிறார்கள்
நீண்ட முட் கம்பி வேலிகளினூடு
நகரிற்குள் தினமும்
போய்வரத்தான் வேண்டியுள்ளது
நித்தமும்
காத்திருக்கும் மனிதர்கள்
சட்டைகள் பிய்ந்து
சதைகள் பிய்ந்து
அவலமாய்க் கதறுவர்
அவர்கள் அடிக்க இவர்களும்
இவர்கள் அடிக்க அவர்களும்
சூரியனின் வெம்மையில்
காய்ந்து போகும்
சிதறுண்ட குருதியும்
நம்பிக்கைகளும்
வேற்றுமொழியில் அதட்டும் குரல்கேட்டு
மிரண்டழுகிறது குழந்தையொன்று
கடவுளே . . .
நான் யாரைக் குறை கூறுவேன்?
முதுகுப் புறத்திலிருந்து
பீரிட்டெழும் குருதியைத்தான்
சகிக்க முடியவில்லை

**04.09.96**



## கடைசி

எதுவரைக்கும் இதுவென
இன்னமும் தெரியவில்லை
பரிச்சயம் தரும் வார்த்தைகள்
நினைவு கொள்ளவென
சிறிது ஸ்பரிசங்கள்
நீ முதலிலேயே வந்திருக்கலாம்
வாக்குறுதிகள் பரிமாறியாயிற்று
இனி
மீறுதல் பற்றி
அக்கறையில்லை
குறிதேடும் குவிமையம்
ஒன்றெனவே ஒடுங்குமெனில்
யாராயிருந்தால் என்ன . . .
சேர்ந்து படித்த புத்தகங்கள்
கேட்டு ரசித்த பாடல்கள்
மனனமேயாகிவிட்ட உன்
சில கவிதைகள்
இவையெல்லாம் கடந்து
என்னை என் வார்த்தைகளுள்
பொருத்துதலில் ஏற்பட்ட
சின்னச் சின்ன அவஸ்தைகள்
கடைசியில்
எதை நினைவு கொள்வது
எதைத் தவிர்த்துக் கொள்வது
புரிதல் நிலை கடந்து போவது கூட
இயல்பெனவே . . .
நோகக் கூடாது எனில்
நகம் போல
மயிர் போல
புதியன வளர்தலின்
நம்பிக்கைகளுடன்
பொழுதுகள் கழிகின்றன.

**18.10.97**

## தினந்தோறும்

தினந்தோறும்
அணிந்து பார்த்த முகங்கள்
தரை முழுதும் பரவலிட்டு
கவிதைகள் இற்றுவிட்டன
மொழிபெயர்ப்புகளில் நாட்டமில்லை
புதியன தேடல் பற்றி
மௌனம்
புராதன திசுக்களின் கூழ்மத்திலிருந்து
கூடவே முலைகளும் யோனியும்
பொருந்திப் போயிற்று
அப்படிப் பார்க்காதே என்னை
தலை கோதி
விரல் பின்னி
நட்புற்றிருத்தல் பற்றி
ஒன்றும் அறியாதவளல்ல நான்
இப்போது எஞ்சியிருப்பது
களைப்படைந்த முகம்
குறிதேடியலையும் கண்களால்
சலிப்படைந்துபோன
சிறுமென் இதயம்
யோனி முலைகளற்ற பெண்ணை
யாரும் காதல் கொள்வாரா?
அவளை அன்பு செய்ய
யாருள்ளார் இங்கு?
நண்பர்களின் பார்வையில்
கூசிப்போகிறேன்
நிறைவேறாத கற்பனைகள்
என்னுடனேயே
நிறைவு பெறட்டும்

**20.10.01**



## நினைவு

கைகளில்
குளிர்மையாய் ஏதோ படத்
திடுக்கிட்டுப் போனேன்

உன் கண்ணீரோ?

இப்போது எங்கே இருக்கிறாய் நீ?
குளிர்காலம் முடிந்து விட்டது
நீர் நிறைந்த சிறு குட்டைகளிலெல்லாம்
லூண் பறவைகள்

வெப்பமும் வியர்வையும்
எல்லோரையும்
தூசும் மரங்களும் நிறைந்த
பூங்காக்களுக்கு விரட்டுகின்றன
போன கோடையில்
உன் கருப்பையில்
என் முலைகள் அழுந்த...
காமம் வற்றிப் போயிற்று
இன்று

கடைசியில்
ஒரு மலர்ச் செண்டையோ
ஒரு கவிதையையோ கூட
உன்னிடம் தர முடியவில்லை
எனைவிட்டு
உன்னுடல் சுமந்து சென்றது விமானம்
ஜோ - ஆன்
வான்கூவரில்
எந்தப் புதைகுழியில் தேடுவேன்
உன் உறைந்துபோன புன்சிரிப்பை

**2002**

## பின்னரும்

பின்னரும்
அப்படித்தான்
இலைகளற்றுப் போன மரம்
உயிரைப் பிடித்தபடி கேட்கிறேன்
‘என்னை ஏற்றுக்கொள்’
ஏதோ அருவருப்பானதைத்
தொட்டவன் போல
திரும்பிக் கொள்கிறாய்
கோபம்
உன் குறியைச்
சூம்பவைத்து விடுகிறது
பகலில்
பேசிக் கொள்ள
அதிகமாய் ஒன்றுமில்லை
நண்பர்கள் முன்னிலையில்
சிரித்தபடியும் மோகித்தபடியும்
இருக்கும் பிரயத்தனம்
குளிர் காலத்தில்
இலைகளின்றிச் சுவாசிக்கக்
கற்றுக் கொள்கின்றன
இந்த மரங்கள்

**2003**